**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 12/2020 |
| Prosecution Witness | : | **அ.சா.**5 |
| Name | : | **முகமதுபாசித்** |
| Father's / Husband Name | : | **காஜாமொய்தீன்** |
| Address | : | **பெரம்பலூர்** |
| Age | : | 32/2025 |

**<u>தேதி : 27.05.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் பெரம்பலூரில் வசித்து வருகிறேன். நான் ராஜா தியேட்டர் அருகில் இறைச்சி கடை வைத்துள்ளேன். அ.சா.4 என்னுடைய தந்தை. அவர் வடக்குமாதவி ரோட்டில் ஹோட்டல் வைத்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை தெரியும். என்னுடைய அப்பாவின் ஹோட்டல் கடை அருகில் அ.சா.1ன் வீடு உள்ளது. எங்களுடைய வீடும் அவருடைய வீட்டிற்கு அருகில் உள்ளது. கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு 7.00 மணி அளவில் அ.சா.1ன் வீட்டில் உள்ள கேட்டின் பூட்டை உடைத்து வீட்டிலிருந்த நகை மற்றும் பணத்தை யாரோ திருடிச்சென்றுவிட்டதாக கேள்விப்பட்டேன்.மேற்படி திருட்டு சம்மந்தமாக எங்களுடைய வீட்டின் அருகில் வந்து போலீஸார் விசாரித்து திருடு போனது உண்மையா என்று கேட்டார்கள். அந்த இடத்தை வரைபடம் வரைந்துகொண்டார்கள். அதற்காக என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டடார்கள். சாட்சி கையொப்பம் போட்டேன். என்னுடன் என்னுடைய தங்கையின் கணவர் அபுதாகீர் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டார்.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் பி.காம். படித்துள்ளேன். போலீஸாரின் பதவிகள் பற்றி எனக்கு தெரியும். என்னை எஸ்.ஐ. விசாரித்தார். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று படித்துபார்த்துவிட்டுதான் கையொப்பம் போட்டேன். அ.சா.1 என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு அடிக்கடி செல்லுவதில்லை. நான் கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து போடவில்லை என்றாலும் சரியல்ல. திருடு போனது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த வீட்டின் உள்ளே சென்று நான் பார்க்கவில்லை. நான் சொல்வதுபோல் கையொப்பத்தை சம்பவ இடத்தில்வைத்து போடவில்லை என்றாலும், அ.சா.1 என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.